06.03.2026 OS.No.74/2022 PW2 Name :.கோபு

குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்து குறித்து ஏற்கனவே முனிசிப் கோர்டில் ஒரு வழக்கு நடந்து முடிந்துவிட்டது என்பது தெரியும். அந்த வழக்கில் என்னுடைய அப்பா சாட்சியம் கூறியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ தொலைவில் நான் குடியிருக்கிறேன். வழக்கு சொத்தும் நான் குடியிருக்கும் பகுதியையும் ஒரே பஞ்சாயத்தில் தான் வருகிறது. குல்ஜார்பேகம் தற்போது குடியாத்தத்தில் வசிக்கிறார். 2007ல் அவருடைய கணவர் அன்ஷர்பாஷா இறந்துள்ளார்.
2. அன்ஷர்பாஷாவிற்கு அவருடைய மனைவியும் மற்ற மூன்று வாரிசுகளும் உள்ளனர். வழக்கு சொத்து குல்ஜார்பேகத்திற்கு மட்டும் பாத்தியபட்டது கிடையாது அவருடைய வாரிசுகளுக்கும் சேர்த்து மொத்தம் 4 பேர்களுக்கு பாத்தியம். 04.12.2020 தேதியிட்ட ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த விவரத்தை முதன்மை சாட்சியத்தில் கூறவில்லை. அதற்கு காரணம் இல்லை. அவ்வாறு சாட்சி கையெழுத்து எதுவும் போடாமல் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.
3. நான்கு பேர்களுக்கும் பாத்தியபட்ட சொத்தை குல்ஜார்பேகம் மட்டும் விற்றுள்ளார் என்றால் பட்டா அவர் பெயரில் உள்ளதால் அவர் விற்றுள்ளார். 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதியுள்ள ஆவணத்தை பார்த்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் 2/3பி

ஆகும். அவ்வாறு எந்த சர்வே எண்ணும் இல்லாத நிலையில் குல்ஜார்பேகம் மோசடியாக பட்டா தயாரித்துள்ளதாக கூறி அதை சப்கலெக்டர் ரத்து செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண். 2/3 என்பது பட்டா கிருஷ்ணன் பெயரில் தான் உள்ளது என்றால் அது தற்போது வழங்கபட்டுள்ளது. அது பி.சா.ஆ. 1 ஆகும். மாணிக்கம் வகையரா எனக்கு தூரத்து சொந்தம்.

4. பிரதிவாதிகளுக்கு விரோதமாக நான் செயல்படுவது மட்டும் என்னுடைய வேலை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் நீள அகலம் தெரியாது. மொத்த சதுரடி மட்டும் தான் தெரியும். முனீசிப் கோர்ட்டில் முடிவடைந்த அ.வ.எண்.26/2015 வழக்கின் தீர்ப்பாணையை இணைத்து தான் பத்திரம் பதிவு செய்யபட்டது. பிரதிவாதிகள் ஏற்படுத்திய பத்திரம் தான் முதலில் பதிவானது. வழக்கிற்கு முன் தாவா பிரச்சனை தொடர்பாக காவலூர் காவல்நிலையத்தில் விசாரணை நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

5. தாவா சொத்தில் மாணிக்கம் வசிக்கவில்லை. வழக்கு சொத்திலிருந்து நான் 2 கி.மீ தொலைவில் உள்ள பஞ்சாயத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. முனிசிப் கோர்டில் தாக்கல் செய்யபட்ட வழக்கு குல்சார்பேகம் போட்ட வழக்கு. எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள தீர்ப்பில் வழக்கு சொத்து குறித்து உரிமை மூலம் விளம்புகை பரிகாரம் தள்ளுபடி செய்யபட்டதாக குறிப்பிடபட்டுள்ளது. அதுபற்றி எனக்கு தெரியாது. 6, 7 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யபட்டதாக அதில்

எழுதபட்டுள்ளது. அதுபற்றியும் எனக்கு தெரியாது. மாணிக்கத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 06/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.06 16:47:08 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.